(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நிறுவனங்கள்மூலம் தேன் சேகரிப்பு மற்றும் சோப்பு உற்பத்தி ஆகிய தொழில்களை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நிறுவனங்கள்மூலம் தேன் சேகரிப்பு மற்றும் சோப்பு உற்பத்தி ஆகிய தொழில்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 19-2-2009 அன்று காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது—மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் ஓர் அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்.

2009 பிப்ரவரி 25] [திரு. துரைமுருகன்]

"19-2-2009 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினருக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை காரணமாக இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து கண்டறிவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஞானப்பிரகாசம் தலைமையில் தமிழக அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் க. பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை ஆலடி அருணா ஆகியோரை மருத்துவமனைகளுக்கு அனுப்பி, காயமடைந்த இரு தரப்பினரையும் பார்த்து ஆறுதல் கூறி வரச் செய்ததன்பேரில், அவர்கள் அவ்வாறே பார்த்து வந்து, மாண்புமிகு முதலமைச்சரிடம் நிலைமைகளை விளக்கியதன் தொடர்ச்சியாக பின்வரும் அறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவையிலே வைக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு:

நீதியரசர் திரு. ஞானப்பிரகாசம் குழுவின் அறிக்கை வருவதற்கு சில நாட்கள் ஆகும் என்பதால், இடைக்கால உடனடி நிவாரணமாக காயம்பட்டவர்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபாய் மருத்துவச் செலவிற்காகவும், வாகனங்கள் சேதமடைந்தோருக்கு, அதேபோல் அவற்றைப் பழுது பார்ப்பதற்காக அவரவர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு ஏற்பவும் உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்." (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. கோவை தங்கம்:** இந்தப் பேரவையை சிறப்பான முறையில் நடத்தி வருகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008—2009 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 69 முதல் 72 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.